# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 175/2025 LW– 1 PW– 1

| | |
|---|---|
| Name | : இளம்பரிதி ( புகார்தாரர்) |
| Father's Name | : அடைக்கன் |
| Village | : கேசம்பட்டி |
| Taluk | : மேலூர் |
| District | : மதுரை |
| Age | : 21/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்திருக்கிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ராக்காயி என் அப்பா வழி பாட்டியாவார். கடந்த 21.01.2025ம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் கொட்டாம்பட்டியிலிருந்து நத்தம் வரும் சாலையில் சமுத்திராபட்டியில் எனது பாட்டி பூ கொடுப்பதற்காக சாலையில் சென்றபோது கொட்டாம்பட்டியிலிருந்து நத்தம் நோக்கி வந்த டாடா ஏஸ் வாகனம் அதிகவேகமாக வந்து என் பாட்டியின் மீது மோதியது. அதிவேகமாக என்றால் 50 கிலோ மீட்டருக்கு மேல் ஓட்டுவது. என் பாட்டிக்கு பின்பக்க தலையில் காயம் ஏற்பட்டிருந்ததாக சமுத்திராபட்டியை சேர்ந்த மணி சங்கர் என்பவர் போன் மூலம் எங்களுக்கு தகவல் சொன்னார். அதன்பேரில் சம்பவ இடமான சமுத்திராபட்டி பேருந்து நிறுத்தத்தில் என் பாட்டியை நான் பார்த்தபோது அடிபட்டு ரத்தக்காயத்துடன் நினைவில்லாமல் இருந்தார்.

2. பின்னர் தனியார் அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தேன். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் இறந்துவிட்டதாக கூறினார். மேற்படி டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநரின் பெயர் ஜெகநாதன் என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். மேற்படி வாகனத்தின் பதிவு எண். TN 57 AD 9821 ஆகும். பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் கையொப்பம் என்னுடையது. (**அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

3. எனக்கு விபத்து தொடர்பாக தகவல் கொடுத்த மணிசங்கர் என்பவரது செல்போன் எண் தெரியுமா என்றால் எனது போனில் அவரது நம்பர் உள்ளது செல்போன் எண் மனப்பாடமாக தெரியாது. மணிசங்கர் என்பவர் எனது நண்பர் ஆவார் உறவினர் கிடையாது சுமார் இரண்டு வருடங்களாக அவரை தெரியும் அவரது தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது மணிசங்கர் வீடு எந்த தெருவில் உள்ளது என்றால் தெரியாது விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் எதிரியின் வாகனம் இருந்ததால் அவரது வண்டி எண் தெரிந்து கொண்டேன். சம்பவ இடத்தில் இருந்து கேசம்பட்டி எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் பத்து கிலோமீட்டர் தூரம் இருக்கும் நான் அடிக்கடி நத்தம் வருவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து கிழக்கே 20 அடி தூரத்தில் சிறுகுடிக்கு செல்லும் சாலை வடபுறமாக பிரிகிறது என்றால் சரிதான். அந்த இடத்தில் காரைக்குடி செல்லும் ரோட்டில் காவல் துறையினரால் அமைக்கப்பட்ட நிரந்தர சோதனை சாவடி உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் காவல்துறையினரால் நான்கு தடுப்பு பேரிகார்ட் அமைக்கப்பட்டுள்ளது

என்றால் சரிதான். மேற்படி சோதனை சாவடி திண்டுக்கல் மாவட்ட எல்லையாக இருப்பதால் ஆரம்ப காலம் முதல் உள்ளது என்றால் சரிதான்.

4. அந்த இடத்தில் போலீசார் ரோந்து பணியில் எப்போதும் இருப்பார்கள் என்றால் சரிதான். காரைக்குடியில் இருந்து எந்த ஒரு வாகனமும் மேற்படி சோதனை சாவடி நான்கு பேரிகார்ட்களையும் கடந்து வர வேண்டும் என்றால் சரிதான். அந்த பேரிகார்ட்களை கடக்க பத்து கிலோமீட்டர் வேகத்தில் தான் வர இயலும் என்றால் சரிதான். கிழக்கிலிருந்து வரும் வண்டியானது மேற்படி பேரிகார்டுக்கு மேற்கிலிருந்து ஏதாவது வண்டி வந்தால் கிழக்கு புறமுள்ள வண்டி நின்று தான் வரவேண்டும் என்றால் சரிதான். அதேபோல் வடக்கே உள்ள சிறுகுடி ரோட்டில் இருந்து ஏதாவது வாகனம் திண்டுக்கல் சாலையை அடைந்தால் கிழக்கே இருந்து வரும் வாகனம் மெதுவாக தான் வர முடியும் என்றால் சரிதான். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான், நான் சொல்ல சொல்ல நத்தம் காவல் நிலையத்தில் வைத்து எனது ஊரை சேர்ந்த சின்னத்தம்பி என்பவர் எழுதினார். மருத்துவமனைக்கு சென்று பாட்டியை சேர்த்துவிட்டு அதன் பிறகு காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

5. புகார் மனுவில் தேதி 22.01.2025 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், விபத்து நடந்த அன்றைய தினமே காவல் நிலையம் சென்று விபத்து குறித்து தெரிவித்தேன். ஊர் பெரியவர்கள் சொன்னதன் அடிப்படையில் மறுநாள் காலையில் சென்று புகார் கொடுத்தேன். தகவல் தெரிவித்தவுடன் காவல் நிலையத்தில் இருந்து புகார் கொடுக்க சொல்லி சொன்னார்களா என்றால் ஞாபகம் இல்லை. மறுநாள் 22.01.2025 ஆம் தேதி காலை 10 மணி அளவில் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் காலதாமதமாக புகார் கொடுப்பது தொடர்பாக விபரம் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். தனியார் அவசர ஊர்தியின் பெயர் மற்றும் வாகன எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது பாட்டியை காவல்துறையை சேர்ந்தவர்கள் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று சொன்னால் தவறு. விபத்தானது எதிரியின் அதிவேகத்தால்

**மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டியின் வயது முதிர்வு காரணமாக அவராக கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தினால் தான் உயிர் இழப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் எதிரியின் வாகனம் அந்த இடத்திற்கு வந்ததால் அதை பயன்படுத்தி போலீசார் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல .**

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.06 15:17:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.175/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 175/2025 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : மணிசங்கர் ( கண்ணுற்ற சாட்சி) |
| Father's Name | : அழகப்பன் |
| Village | : சமுத்திராப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 23/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கல்லூரியில் படித்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை நான் பார்த்திருக்கிறேன். கடந்த 21.01.2025ம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் சமுத்திராப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் அ.சா.1ன் பாட்டி நத்தத்தில் பூ வியாபாரம் செய்துவிட்டு மீதமுள்ள பூவை சமுத்திராப்பட்டியில் கொண்டு வந்து கொடுப்பதற்காக பேருந்தில் இருந்து இறங்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது கொட்டாம்பட்டியில் இருந்து நத்தம் நோக்கி வந்த டாடா ஏஸ் வாகனம் அதிகவேகமாக வந்து அ.சா.1ன் பாட்டியின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. மேற்படி வாகனத்தின் பதிவு எண். 9821 ஆகும். பின்னர் அந்த பாட்டியைப் பார்த்தபோது அவர் பின் பக்க தலையில் பலத்த காயம்பட்டி ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. விசாரித்தபோது கேசம்பட்டியைச் சேர்ந்த அ.சா.1ன் பாட்டி என தெரியவந்ததால் அ.சா.1க்கு போன் மூலம் தகவல் சொன்னேன். பின்னர் அ.சா.1 வந்ததும் பாட்டியை அவசர

ஊர்தியில் தூக்கி சென்றுவிட்டார்கள். மறுநாள் அ.சா.1டம் நான் கேட்டபோது பாட்டி இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

2. விபத்து நடந்ததாக சொல்லப்படும் பகுதியில் வடக்கு ஒரு பேருந்து நிறுத்தமும், தெற்கு பக்கம் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் தெற்கே உள்ள சமுத்திராப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் இருந்தேன். காயம்பட்டு கிடந்த பாட்டியை மருத்துவமனையில் சேர்க்க நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை, அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸுக்கு போன் செய்தார்கள் அருகில் இருந்த நபர்கள் ஆம்புலன்ஸுக்கு போன் செய்ததில் பாட்டியை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் எடுத்து சென்று விட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 50 அடிதூரத்தில் வடபுறமாக சிறுகுடி செல்லும் தார் சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் திண்டுக்கல் காரைக்குடி ரோட்டில் காவல்துறையினரால் அமைக்கப்பட்ட சோதனை சாவடி உள்ளது என்றால் சரிதான். அங்கு ரோட்டின் குறுக்கே நான்கு பேரிகார்ட் உள்ளது என்றால் சரிதான். அந்த சோதனை சாவடியானது வெகு காலமாக அங்கு உள்ளது என்றால் சரிதான். அங்கு சோதனைக்காக ஒரு போலீசார் எப்போதும் இருப்பார் என்றால் சரிதான்.

3. பொதுவாக காரைக்குடி சாலையில் இருந்து ஒரு வாகனம் பேரிகாடை கடக்கும்போது மெதுவாக தான் வர வேண்டும் என்றால் சரிதான். திண்டுக்கல்லில் இருந்து ஒரு வாகனம் வந்தால் காரைக்குடி சாலையில் வரும் வாகனம் நின்று தான் வர வேண்டும் என்றால் சரிதான். அதேபோல் சிறுகுடி சாலையில் இருந்து ஒரு வாகனம் வந்தால் காரைக்குடியில் இருந்து வரும் வாகனம் நின்று தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எதிரியை நான் சம்பவ இடத்தில் வைத்துப் பார்த்தேன் . எதிரியை சம்பவ இடத்தில் வைத்து

பார்த்ததாக போலீசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சரிதான். பாட்டி யார் என்று சம்பவம் நடந்தபோது தெரியாது என்றால் சரிதான் . எனது நண்பர்களான நவீன் மற்றும் அருண் ஆகியோர் சொல்லி அ.சா.1ன் பாட்டிக்கு விபத்து ஏற்பட்டது தெரியவந்தது.

4. அ.சா.1 இளம்பரிதியின் தகப்பனார் பெயர் தெரியாது. எனது நண்பர்களின் மூலமாக இறந்து போன நபர் குறித்து தெரிந்து கொண்டேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . காயம் பட்ட நபரை ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பிறகுதான் அவரது உறவினர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சம்பவத்தை பார்த்ததாக பொய்யாகசொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்து போன நபர் வயதானவர் என்பதால் அவராகவே கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும் அந்த நேரத்தில் எதிரியின் வாகனம் வருவதை பயன்படுத்தி எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.06 15:17:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்